சிவமயம்

Newspaper in Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருகூ] யாழ்ப்பாணம்—சர்வசித்து ஶு ஆனி மீ உச உ (1947 ஜூலை 8 செவ்வாய்க்கிழமை) [இல. உஎ

### பிரார்த்தனை

அருளுடைச் சுடரே யளிந்ததோர் கனியே
பெருந்திற லருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெரு மானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

—மணிவாசகர்.

## "ஜேய் ஹிந்த்"

### பிரான்சிய தேசாதிபதி முழக்கம்

இந்தியாவில்பிரான்சியர்க்குச்சொந்தமாயுள்ள பிரதேசங்களின் தேசாதிபதியான மிஸ்ரர் பாரன் சென்ற வாரம் விழுப்புரம் ஜில்லாவில்நிகழ்ந்த ஓர் உபசாரக் கூட்டத்தில், தான் ஓர் பிரான்சியனாக இருந்தபோதிலும், பாரததேவியின் புதல்வனாகவே தன்னை மதிப்பதாகக் கூறித் தன் பிரசங்க முடிவில் "ஜேய் ஹிந்த்"என்ற தேசீய கோஷத்தைக் கூறினார். அவருடைய பிரசாரணச் சுருக்கம் வருமாறு:—

"நான் பிரான்சியனாக இருந்தபோதிலும், நான் என்னை ஓர் இந்தியப் பிரஜை என்றே கருதிக்கொள்ளுகிறேன். இந்தியாவில் நான் கற்றுள்ள விஷயங்கள் இரண்டு: ஒன்று அகிம்சை; மற்றது முன்னேற்ற நோக்கம். பிரான்சிய சாம்ராஜ்யத்தில் நீங்கள் சுதந்திர புருஷராக வாழ நான் சலியாதுழைப்பேன்; பிரான்சிய அரசாங்கத்துடன் கடைசிவரை போராடுவேன் என்பதைப் பூரணமாக நம்புங்கள். இப்போது பிரிட்டிஷ் இந்தியா சுயராஜ்யம் பெறமுன்னர், நீங்கள் பூரண சுதந்திரம் அநுபவிக்கிறீர்கள். என் முயற்சியில் என்னோடுஒத்துழையுங்கள், அதன்மூலம்தான் பிரெஞ்சிந்தியாவும், அகண்ட இந்தியாவும் முன்னேறும். ஜேய் ஹிந்த".

## 8 ஆண்டில்

### அணுக்குண்டு யுத்தம்

அணுச்சக்தியைக் கட்டுப்படுத்துதற்கான விஞ்ஞானிகள் சங்கத்தின் கூட்டம் ஒன்று சென்றவாரம் அமெரிக்காவில், பிரபல பேராசிரியர் அல்பேர்ட் ஈன்ஸ்றீன் தலைமையிற் கூடியது. கூட்டம்முடிந்தபின், பின்வரும் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது:

"இன்னும் 8 ஆண்டு காலத்தில் ஓர் பெரிய அணுக்குண்டு யுத்தம் இந்த உலகத்தில் நிகழவிருக்கிறது; 1955-ம் ஆண்டில் ரூஷியா மிகப் பெருந்தொகையான அணுக்குண்டுகளைக் குவித்துவைத்துவிடும். ரூஷியா இப்படி ஒருபக்கமாகவும், ஆங்கிலோ–அமெரிக்கா இன்னோர் பக்கமாகவும் அணுக்குண்டுகளைக் குவித்துவைத்திருந்தால், ஈற்றில் நிகழ்வது என்ன? ஓர் கோர யுத்தம்தான். ஆனால் அதனைத் தடுக்கவேண்டுமானால், இந்த இரண்டு பகுதியினரும் அணுக்குண்டுகளைக் குவிக்கமுன் ஏதும் நடைவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

"உலகம் அணுக்குண்டினால் அழிந்து நாசமடையாதிருக்க வேண்டுமானால், உலக அரசாங்கம் ஒன்று ஏற்படவேண்டும்."

## ஜனநாயக ஊழல்

### இப்போதுள்ள வாக்குச் சம்மத முறை மாற்றப்படுதல் வேண்டும்

இன்று சர்வஜன வாக்குரிமையிருக்கிறது. அந்தவாக்குரிமையைப் பெறுதற்குப் பாராளுமன்றத்து அபேட்சகர் இருவர் எமமை நாடி வருகிறார்கள். இவர்களிருவரும் தகாதவர்களெனக் கண்டால், நாம் வாக்குச்சம்மதம் தெரிவிக்கும் இடத்துக்குப் போகாமல் இருந்துவிடவேண்டியதுதான். ஆகவே, நாம் எம் வாக்குரிமையைப் பிரயோகிக்கமுடிகிறதில்லை. இந்த இரண்டுபேரும் ஆகாது. இவர்கள் எமக்கு வேண்டியதில்லை என்ற அபிப்பிராயத்தைக் கூற எமக்கு வசதியளிக்கப்படவில்லை. அப்படியான வசதியை அளிக்கவேண்டும்; வாக்குச் சம்மதம் தெரிவிக்கும் இடத்துக்குச் சென்று, இந்த இரண்டு அபேட்சகரும் வேண்டாம் என்று சொல்ல எமக்கு உரிமையைத் தரும் 'எதிர்மறைச் சம்மத" முறையை அநுட்டானத்துக்குக் கொண்டுவர வேண்டும் என்று ஆந்திரச் சர்வகலாசங்க உப அத்தியட்சகரும் சிறந்த அரசியல் வாதியுமான சேர். வி. இராமலிங்கரெட்டி இக்கட்டுரைமூலம் தெரிவிக்கின்றார்.

தேர்தலுக்கு எமது வாக்குரிமையை நாடும் இரு அபேட்சகரில் எவருக்காவது நாம் எமது சம்மதத்தைக்கொடுத்தேயாகவேண்டும், அல்லது தேர்தற்றலத்துக்குப் போகா

தொடர்ச்சி 6-ம் பக்கம்

## கருமமும் கடவுள் வழிபாடும்

[M. P. தியாகராஜன்]

கடவுள் வழிபாட்டில் பெரிதும் ஈடுபட எண்ணுவோர்க்கு ஏனைய கர்மங்கள் இடைஞ்சலாகத் தோன்றுகின்றன. கர்மம் செய்வதிலேயே மனதை ஈடுபடுத்துவோர் கடவுள் வழிபாட்டைப் புறக்கணிக்கின்றனர். எனவே இவ்விரண்டும் முரண்பட்டதாகவே தோன்றுகின்றன. இம்முரண்பாடு சிலருக்குத் தாம் செய்யும் கர்மத்தில் அதிருப்தியையும் கடவுள் வழிபாட்டில் ஏக்கத்தையும் உண்டாக்குகிறது. குருக்ஷேத்திரத்தில் அர்ஜுனனுக்கு ஏற்பட்ட மனக் குழப்பம் தம் கர்மத்தைச் செய்ய வேண்டுமா? வேண்டாமா? என்பதே. பகவான் அவருடைய ஐயத்தை நீக்கி கர்மத்தைச் செய்யவேண்டிய அவசியத்தையும் வழியையும் போதித்துள்ளார். கொங்கண மஹாரிஷியின் வரலாறு வாசகர்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஒருதினம் அவர் தவமிடற்றுங்கால் தம்மீதுஎச்சமிட்ட கொக்கைக் கண்ணால்சுட்டெரித்தார். அதேதினம் பிக்ஷைக்குப் போகும் போது, ஒரு பெண்மணி தன் கர்மங்களை முடித்துக்கொண்டு பின்வந்து பிக்ஷையிட்டதற்காக அம்மாதைச் சினங்கொண்டு நோக்கினர். அம்மாது "கொக்கென்று நினைத்தனையோ கொங்கணவா என்று" வினவினள். அவ்வினா மஹரிஷிக்கு அச்சத்தையும் ஆச்சர்யத்தையும் உண்டாக்கிற்று. அம்மாதின் ஞானத்திற்குக் காரணம் யாதோ என அம்மஹரிஷி வினவ, அவள் அவரை ஒரு கசாப்புக்கடைக்காரனிடம் அனுப்பினள். அவன் தன் சுதர்மத்தைச் செய்துகொண்டு ஞானத்தையும் பெற்றிருந்தான்.

இக் கதைகளினின்றும் நாம்பெறக் கிடப்பது என்னவெனில் கர்மம் கடவுள் வழிபாட்டிற்கோ ஞானசாதனைக்கோ முரண்பட்டதன்று என்பதே. ஆன்ம ஒழுக்கத்திற்கு முக்கியமாக வேண்டுவது சித்தசுத்தியென்று அத்வைத நெறி வற்புறுத்துகிறது, சித்த சுத்தியென்னும் அஸ்திவாரத்தின்மேல்தான் ஞானமாளிகை கட்டப்படவேண்டும். சித்த சுத்தி அடையவேண்டுமாயின் நல்ல குணமும் நல்லொழுக்கமும் பழக வேண்டும் ஞானத்தைப் பெற தனிமையும் நல்லொழுக்கத்தைப் பழக சமூகமும் தேவையென எமர்ஸனென்னும் ஆங்கிலப் பெரியார் கூறியிருக்கின்றனர். சமூகத்திடை கர்மமின்றி யிருத்தல் முடியாது. சமூகச் சேவை முதலிய கர்மங்களினால் சித்த சுத்தி ஏற்படுவது திண்ணம். ஏற்பட்டபின் கர்மங்கள் தாமாகவே விலகிவிடும். இறைவனை அடைய வேண்டுமென்று கர்மங்களை நாம விலக்க வேண்டுவதில்லை. ஸ்ரீராமகிருஷ்ணர் தம் தாய்க்குத் தர்ப்பணம் செய்கையில் நீர் வந்தினால் அவருடைய கை நீர் வந்த மறுத்தது என்றால் அவருடைய சித்த சுத்தி உடலின் மயிர்க்கால்கள் தோறும் பாவி நின்றது என்றே எண்ணவேண்டும்.

அப்படிப்பட்ட தூய்மையை அடையுமவரை எவருக்கும் கர்மம் அவசியம். நம்மை நாம் தூய்மையடைந்தவர்களென்று எண்ணிக் கர்மத்தையும் சமூகத்தையும் புறக்கணிப்போமாயின் தமோகுணவயப்பட்டு அல்லலுற வேண்டியவர்களாவோம். பின் இயற்கை அன்னை நம்மைக் கர்மத்திலீடுபடுத்திவிடுவாள். சித்த சுத்தியை அடைந்த பெரியவர்கள் கூட கர்மம் செய்து தம்மைப் பின்பற்றும் சமூகத்தினருக்குக் குறிக்கோளாயிருக்க வேண்டும என்று பகவான் கீதையில் உபதேசிக்கிறார்,

கர்மம் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது எனக் கண்டபின் நம் கர்மங்களை எவ்வாறு செய்வது என்பதைப்பற்றிச் சற்று ஆராய்வோம். ஒவ்வொரு கர்மத்திற்கும் ஒரு நோக்கம் உண்டு ஒரு நோக்கத்தைக் கொண்டுதான் எக்காரியத்தையும் செய்கிறோம் செய்வதில் ஓர் உணர்ச்சியை அடைகிறோம். ஒவ்வொரு காரியமும் ஒரு பயனையும் அளிக்கிறது. எனவே, நோக்கம, உணர்ச்சி, பயன் என்ற இம் மூன்றினாலேதான் ஒவ்வொரு கர்மமும் பாதிக்கப்படுகிறது. நோக்கம் பரந்த நோக்கமாகவும் தெய்வத்தன்மை பொருந்தியதாகவும் இருக்கவேண்டும். உணர்ச்சி சாந்தமும அடக்கமும் உடையதாக இருக்கவேண்டும். பயனைப் பொருட்படுத்தாது இறைவன் சங்கல்பம் என விடுத்து பரந்த நோக்கத்துடனும் சாந்தத்துடனும் எக்காரியத்தைச் செய்வோமாயினும் அக்கர்மம் நமக்கு அமைதியையும் ஆனந்தத்தையும் தரும்; அவைமூலம் சித்த சுத்தி கிட்டுவது திண்ணம்.

கடவுள் வழிபாட்டைச் சற்று ஆராய்வோம். கடவுளைக் காணுவது மட்டும் நம் முடிவான நோக்கமாக நாம் கொள்ளுதல் கூடாது. இராவணன் கடவுளைக் கண்டு வரம்பெற்றிருந்தும் சாஸ்திரங்களை நன்குணர்ந்திருந்தும் ஏன் இழிச்சொற்களுக்காளாகி அழிய நேர்ந்தது? தன்னுள் பொதிந்து கிடந்த காமக் குரோதாதிகளைக் களைந்து சித்தசுத்தி அடையாமல் தவமியற்றியதின்பயனே அவனை அம் முடிவுக்காளாக்கியது. எனவே அவரவர்களது தீய சம்ஸ்காரங்களைக் களையும் சாதனமார்க்கத்தையே அவரவர்கள் கடைப்பிடித்தொழுக வேண்டும். "ஒருவர் அனுபவம் ஒருவர் மனதில் உதியாதே" என்று கூறுவதின் நோக்கம் ஒவ்வொருவருடைய சம்ஸ்கார வேறுபாட்டினையொட்டியே கூறியதாகும். மேலும் சிறிதளவு சாதனையைக் கொண்டு உயரிய நிலையை அடைய எண்ணுவதும் சாத்தியமன்று. வாழ்க்கை வளர்ச்சியின் வயப்பட்டதாகலின் வாலிபத்தினின்றும் வயோதிகத்தன்மை உடனே அடைந்துவிட முடியாது. ஆன்ம வளர்ச்சியும் அதுபோன்றதேயாகும். ஜீவத்தன்மையிலிருந்து சிவத்தன்மையை எளிதில் அடைந்துவிட முடியாது. பொதுவாக நாம் கொள்ளும் சாதனை இறைவனை தியானிப்பது. தியானம் என்ற உடன் இறைவனை உருவமாகத் தியானிப்பதா அருவமாகத் தியானிப்பதா என்ற ஐயம்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஹூ ஆனிமீ ௨௪௨ செவ்வாய்க்கிழமை


## "பழிப்பன பகரேல்"

பொய், குறளை, வன்சொல், பயனில்சொல் இந் நான்கும் பழிப்பன எனப்படும்; இந்த நான்கனுள் ஒன்றே பகர்வோர்க்குப் பெருந் தீமை விளைத்தற்குப் போதியதாக, இவற்றுள் இரண்டினை, மூன்றினை, நான்கினையும் பேசத் தலைப்பட்டால், அவர்க்குப் பெருந் தீமை விளைத்தற்கு வேறு ஏது யாதும் வேண்டாவெனலாம்; இக்காரணம் பற்றியே தமிழ் மூதாட்டி "பழிப்பன பகரேல்" அதாவது பெரியோரால் நல்லோரால் வெறுக்கப்படுதற்கு ஏதுவாகிய இந்த நால் வகைப் பேச்சுக்களுள் ஒன்றையேனும (எந்தச் சந்தர்ப்பத்திலும்) பேசவொண்ணுதென மக்களுக்குத் தடுத்துப் புத்தி புகட்டினள்.

தமிழ் மூதாட்டி இப்படிப் பாடியது நிசம்; ஆனால் இந்த நேரத்தில் இம் முதுமொழியை எடுத்து ஆளவேண்டிய காரணமென்னையெனிற் சொல்லுதும்; பழிப்பன பகர்தல், எழுதுதல், பத்திரத்தில் அச்சிட்டு சுவர் முதலியவற்றில் ஒட்டுதல், அப்பத்திரங்களை வலிதில் வழங்குதலாகிய இச் செயல்கள் இத்தேர்தற் காலத்தில் அதிகப்பட்டுக் கொண்டன; ஆனதினாற்றான் இவ் விஷயத்தை இச்சந்தர்ப்பத்தில் எழுத நேர்ந்தது; கல்வியறிவிற் குறைந்த ஒருவர் இருவர் இல்லையேற் சிலர்தாமும் இப்படிப்பட்ட பழிப்பன செய்யத் தலைப்படின், அதனால் வருங் குற்றம் ஊரில் அதிகம் பரவாதெனலாம்.

பாராளுமன்றப் பிரதிநிதிகளாய் வருதற்கு இப்பொழுது முற்பட்டு நிற்கும் தலைவர்களின் பேரால் இப்படியான பழிப்பன பகர்தல் முதலிய செயல்களும் ஒருவரை யொருவர் தூற்றுதல், நிந்தித்தல், பரஸ்பரம் வசை பேசுதலென்னுமிவைகளும் அதிகப்படுதலினாலே, அப்படியான செயலைச் செய்பவர்கள் எவரை ஆதரிக்கிறார்களோ அவருக்கே பிரதிகூலமுண்டாகுமெனலாம்; அபிப்பிராயபேதம் ஒரு குற்றமாக மாட்டாது; எவருந் தத்தம் அபிப்பிராயத்திற் சரியெனக் கண்டதைச் செய்யலாம்; தம்முடைய அபிப்பிராயத்தோடு மற்றவருடைய அபிப்பிராயம் மாறுபட்டால், இவர் அவரையும், அவர் இவரையும் தூற்றவேண்டியதில்லை, ஏசவேண்டியதில்லை, ஒருவரோடொருவர் பிணக்குப்படவேண்டியதில்லையாம். மேலும் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெறும் பொருட்டு முன்னிற்குந் தலைவர்களுக்குத் துணையாகக் கருமஞ் செய்வோர், தாம் ஆதரிக்குந் தலைவர்களுடைய திறமைகளை, பேரறிவை, வாக்குவன்மையை, அபிமானத்தை, இன்ன பிறவற்றை எடுத்துப் பலரறியப் பாராட்டிப் பேசினால் அமையும்; அங்ஙனஞ் செய்வதோடமையாது, இல்லையேல் அவ்வாறு செய்தலை விடுத்து எதிர்க்கட்சியில் முற்பட்டு நிற்பவரை ஏசுவதினாலும் தூற்றுவதினாலும் அடையக்கூடிய நன்மையில்லா தொழிவதோடு சில சமயங்களில் தம் கட்சியினர்க்குத் தீமை வந்துறுதலுங் கூடும்.

மேலும்,

"இன்சொலாலன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலா லென்றும் மகிழாதே"

என்ற பிரகாரம் இனியவார்த்தையும் இதமான ஊடாட்டமும் எதிர்க்கட்சியினரையும் தம்வசப்படுத்துமென்பது அனுபவத்திற் கண்டது; எதிர்க் கட்சியினராயிருந்தாலும் மற்றைக் கட்சியினர் அவரோடு இதமாக ஊடாடுவதினால் விளைவது நன்மையேயன்றி எவ்வகையான தீமையுமில்லையாம். தேர்தல்போன்ற பெருங் கருமங்களில் ஈடுபட்டுழைப்பவர் மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாது, செவ்வியருமையும் பாராது, அவமதிப்புங் கேளாது தம் கருமத்திலேயே கண்ணாயிருத்தல் வேண்டும்; இயன்றவரையிலே சாத்வீக வழிவகைகளைக் கைக்கொள்ள முயலுதல் வேண்டும்; சாத்வீக முறை ஒருபோதுந் தவறமாட்டாதென்பதற்கு மகாத்மா காந்தியும் இந்தியா விரைவிலடையவிருக்கும் பூரண சுயராச்சியமுமே தக்க சான்றாகும்.

அல்லாமலும், பிறரால் மதிக்கப்பட விரும்புகிறவன், பிறர் நன்மையை உத்தேசித்து உழைக்க விரும்புகிறவன், தான் பிறந்த நாட்டின் நலனையிட்டுத் தொண்டாற்ற ஆசைப்படுகிறவன் இன்னோரன்னவர்கள் தாம் நினைத்த கருமம் கைகூட வேண்டிற் செய்யத்தக்க உபாயமென்னவென்பதை எங்கள் முன்னோர் சுருக்கமாகத் தெரிவிக்கின்றார்கள்.

"பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாதே நோற்ப தொன்றுண்டு —பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்"

அதாவது ஊரவர்களால் மதிப்பு முதலிய நன்மைகளைப் பெற விரும்புகிறவன் எந்த நேரமும் மறத்தலின்றித் தன் மனத்தில் விரதமாகக் கொண்டு செய்ய வேண்டிய உபாய மொன்று உண்டு; அது என்ன வென்றால், மற்றவர்களிடத்தில் ஏதும் நன்மையிருந்தால் அந்த நன்மையை யெடுத்துப் பலரறியச் சொல்லி, அவரிடத்தில் யாதும் தீமையுளதேல் அதனை எவருமறியாதபடி மறைத்து வைத்துக் கொண்டு எல்லோரிடத்திலும் தாழ்மையோடு ஊடாடுதலாம்; இப்படிச் செய்தலால் எடுத்துக் கொண்ட[illegible]தும்; பி[illegible]

கம் அவமதிப்பு காரியப் பிரதிகூலமென்னு மிவைகள் ஒருபோதும் நேரா; எல்லார் மதிப்புமுண்டாகும்; இன்னபிற நன்மைகளும் வந்தெய்தும். நாட்டு மக்களின் பெருமைக்கு எவ்வகையான இழுக்கும் நேராதாம்; ஆதலின் இந்த முறையே கைக்கொள்ளத் தக்கது.

## மீண்டும் ஏகாதிபத்திய மோகமா?

இந்தியாவை, பாகிஸ்தான் இந்தியா என்ற இரண்டு கூறுகளாக்கி, அந்த இரண்டு பகுதிகளுக்கும் அதிகாரத்தை மாற்றுதற்கான சட்டம் சென்ற வெள்ளிக்கிழமை பிரிட்டிஷ் பாராளுமன்றத்துப் பொதுமக்கள் சபையில் இந்தியா மந்திரியினாற் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இதனையொட்டிய விவாதம் நாளை மறுதினம் நிகழும் ஆனால் குறித்த மசோதா பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் மிகவும் சுலபமாக நிறைவேறிவிடும் என்பது இப்போது ஏற்பட்டுள்ள நிலையில் இருந்து அறியலாகும். குறித்த மசோதா, இந்தியர்கைக்கு அதிகாரத்தை மாற்றுவதாக விருந்தாலும், அதில் உள்ள ஷரத்துக்கள் சில, பிரிட்டிஷாருடைய உண்மை நோக்கத்தில் சந்தேகத்தைக் கிளப்புவதாக இருக்கின்றன. இந்தியாவின் இரண்டு பிரதேசங்களிலும், அல்லது ஒரு பகுதியில் பிரிட்டிஷ் படைகள் இருந்தால், அப்படைகள் மீது அதிகாரஞ் செலுத்த இந்திய அரசாங்கத்துக்கோ, பாகிஸ்தான் அரசாங்கத்துக்கோ உரிமையில்லை என்றும், அப்படைகள் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கே பொறுப்பாக இருக்குமென்றும் ஓர் விதி புகுத்தப்பட்டிருப்பது நோக்கத்தக்கது. மழைவிட்டுந் தூவானம் விடவில்லை என்றாங்கு பிரிட்டிஷார், இந்திய ஏகாதிபத்தியத்தைக் கலைத்து மூட்டை முடிச்சுக்களுடன் தாம் வெளியேறப்போவதாகக் கூறி, அதேமூச்சில் தம் ராணுவத்தை இந்திய மண்ணில் வைத்திருக்க வழிகோலுவதன் காரணம் என்ன? பிரிட்டிஷ் இராஜதந்திரிகள் இந்தியாவைத் துண்டாடியதும், சுதேச சமஸ்தானங்கள் இந்திய சமஷ்டியிற் சேராது தனித்தியங்க சுயதேச்சாதிகாரம் கொடுத்திருப்பதும் நன்மைக்கல்லவென்றே நாம் அஞ்ச வேண்டியிருக்கிறது. எல்லைப்புற மாகாணத்தைப் பாகிஸ்தானுடன் சேர்த்து பாகிஸ்தானிலும், கோடரிக் காம்புகள் போன்ற திருவாங்கூர், ஹைதராபாத் முதலாம் சமஸ்தானங்களிலும் தமது படைகளை நிறுவி, சோவியத் ரூஷியாவின் செல்வாக்குப் பரவவிடாமல் தடுக்கப் பிரிட்டிஷார் கங்கணம் கட்டி நிற்கின்றனர். இந்த நிலைமையில், வடமேற் கெல்லைப்புற மாகாணத்தைத் தன்னுடன் சேர்க்க வேண்டும் என்று ஆப்கானிஸ்தானம் கேட்பதும், அந்தக் கேள்வி ரூஷியர் தூண்டுதலினாலேயே கிளப்பப்பட்டது என்று பிரிட்டிஷ் அரசாங்கம் கூறுவதும், அந்தஎல்லைப்புறத்துள்ள மக்கள் சுதந்திரம் கேட்பவும் அதனைப் புறக்கணித்து அவர்களைப் பாகிஸ்தானுடன் இணைக்க பிரிட்டிஷ் அரசாங்கம் நிச்சயித்திருப்பதும் கூர்ந்து நோக்க வேண்டிய விஷயங்களாகும். பிரிட்டிஷ் அரசாங்கம் தனது இப்போதைய செயல்களினால், மூன்றாவது உலக மகாயுத்தத்தை வலிந்து அழைக்கிறதோ என்று நாம் கருதவேண்டியிருக்கிறது. பாகிஸ்தான் டொமினியனில் உள்ள எல்லைப் புறத்தில் பிரிட்டிஷார் தங்கள் ராணுவத்தை நிறுவுவார்களேயானால், அது தனக்கெதிராகச் செய்யப்படும் ஆக்கிரமிப்பு வேலை என ரூஷியா கருதி ஏட்டிக்குப் போட்டியாக கருமம் ஆற்றினால் அதனையிட்டு நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. சாந்தி, சமாதானம் என்ற பதங்களை நெட்டுருச்செய்துகொண்டு தங்கள் படைகளை உலகில் உள்ள கேந்திர ஸ்தானங்களில் நிறுவிவரும் மனப்பான்மை பிரிட்டிஷார்க்கும் ஏனைய வல்லரசுகளுக்கும் இருக்கும் வரையில் உலக சமாதானம் என்பது முயற் கொம்புதான்.

# குறிப்புக்கள்

### வேலையின்மை

மலேயாவின் ராணுவ சம்பந்தமான கருமங்களின் பொருட்டு 11,000 இலங்கையரை வேலைக்கமர்த்தப் பிரிட்டிஷ் அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இது வரவேற்கத்தக்க ஓர் செய்தியாகும். இந்த இலங்கையில் வேலையில்லாத் திண்டாட்டம் ஆரம்பமாகி இன்னும் சிலமாத காலத்தில் உச்சநிலையை அடையும் என்று எதிர்பார்க்கலாகும். ஆகவே, மலேயா அரசாங்கம் இலங்கையில் 11000 மக்களுக்கு வேலைகொடுக்க ஒப்புக்கொண்டமை ஓரளவுக்கு எமக்கு ஆறுதலைத் தருவதாகும். ஆனால், இப்படியான "மேற்பூச்சு" வேலைகளினால், அதிகரித்துக்கொண்டுவரும் வேலையின்மை என்னும் கொடிய நோயைப் பரிகரிக்க முடியாது என்பதனை இலங்கை யரசாங்கத்துக்குத் தெரிவிக்க விரும்புகிறோம். தன்தேய மக்களின் பிழைப்புக்கு அந்நியநாடுகளை எதிர்பார்க்கும்எந்தஅரசாங்கமும் சுயமதிப்புடையதாக மாட்டாது. தன் செல்வ வளத்தை அதிகரித்து அதன்மூலமாகத் தன் மக்களுக்குப் பிழைப்பு உதவி, அவர்களை மனாபிமானமாக வைத்திருக்கவேண்டியது ஒவ்வோர் அரசாங்கத்தினது முதற் கடமையாகும். இலங்கை யரசாங்கம் இவ்விஷயத்தில் ரூஷியாவிலும் ஏனைய சில நாடுகளிலும் அநுட்டிக்கப்படும் முறைகளை அவதானித்து, ஓர் [illegible] திட்டத்தையோ. [illegible] திட்டத்தையோ [illegible]க் கொண்டு வேலையில்லாமையைப் போக்குதல் வேண்டும்.

*
* *

### இலங்கை-இந்தியப் பிரச்சினை

அநேக காலமாக விவாதிக்கப்பட்டு வரும் இலங்கை-இந்தியப் பிரச்சினையை, இலங்கை யரசாங்கமும், இந்திய அரசாங்கமும் ஆராய்ந்து ஓர் முடிவு செய்யவேண்டிய காலம தூரத்தில் இல்லை என்றே நாம கருதுகிறோம். சில அரசியற் காரணங்களுக்காக, மிஸ்டர் சேனநாயக்காவும் அவர் கோஷ்டியாரும் இந்தப்பிரச்னையை இதுவரை தவணையிட்டுக் கொண்டே வந்திருக்கிறார்கள். ஆனால் இனியும் இவ்விஷயத்திற் பாராமுகமாயிருத்தல் முறையாகாது. இலங்கைவாழ் இந்திய மக்களும், ஸ்ரீஜகத்கிரி கூறியாங்கு, இரண்டு தோணிகளிற் கால்வைப்பதை விடுத்து, இலங்கையைத் தாயகமாகக் கொள்வதா அன்றா என்பதை இப்போதே நிச்சயித்துக்கொள்ளுதல் வேண்டும். 'உனக்குமுன் கிளைக்குநாளும் உண்டியும் வாழ்வு மிங்கே மனைக்கருந் தங்கே" என்றாங்கு இலங்கை இந்தியமக்கள் கருமம் ஆற்றுகின்றார்கள் என்ற ஓர் அபவாதம சேனநாயக்காக் கோஷ்டியாற் சரியாகவோ, பிழையாகவோ இந்தியர்மீது சாட்டப்பட்டு வந்திருக்கிறது, இந்த அபவாதம் ஆதாரமற்றது என்பதை நிரூபிப்பது இலங்கைவாழ் இந்தியரின் கடமையாகும்.

தொடர்ச்சி 5ம்பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் ஐக்கிய முன்னணி வேண்டும்

## நவீன சமதர்மக் கொள்கை

### சமயாபிமானிகளுக்கு வேண்டுகோள்

(நமது அரசியல் நிருபர் எழுதுகிறார்)

சென்ற 4.7-47 இல் வெளிவந்த கத்தோலிக்க வேத பாதுகாவலன் பத்திரிகையில் ஒருவர், நான் சமதர்மிகள் விஷயமாக எழுதியுள்ள கட்டுரைகளை ஆதரித்து ஓர் கடிதம் எழுதியுள்ளார். சமயவிஷயமாக அபிப்பிராயபேதம் இருந்தபோதிலும், சமயக் கோட்பாடு ஆசாராநுட்டானங்களுக்கு யமன் போன்றது இந்த நவீனச் சமதர்மஇயக்கம் என்பதில் ஹிந்துக்கள், கிறிஸ்தவர், பௌத்தர்கள் முஸ்லீம்கள் என்பவர்களுக்கிடையே அபிப்பிராய பேதம் இல்லை. சமதர்மம் என்றால் என்னவென்பதின் உண்மையான அர்த்தம் தெரியாத ஓர்சில அரசியல்வாதிகள் சர்வஜன வாக்குரிமையுள்ள இந்தக் காலத்தில், பாராளுமன்றத்தில் அங்கத்துவம் பெறற்காக, பாமர ஜனங்களுக்கு ஆசை வார்த்தை கூறிச் சமதர்மச் சுலோகங்களை மேற்கொள்ளத் தொடங்கியிருக்கின்றனர். சிரங்கு முற்றி பவுந்திரமாகலாம். அதுபோல, இப்போது கேவலம் கோஷமளவில் நிற்கும் "சமதர்ம" இயக்கம், நாளடைவிற் பரவி மக்களைப் பீடிக்காமல் இருப்பதற்கு இந்நாட்டுச் சமயாபிமானிகள் இப்போதே ஏற்ற முயற்சிகள் எடுத்துக்கொள்ளுதல் நலம். சமய வாழ்க்கைக்கு சன்மார்க்கத்துக்கு, இது ஓர் சோதனைக் காலம். ஆரோ செத்தால் எவனோ அழுவான் என்ற மனப்பான்மையை விடுத்து, ஹிந்துக்களும் கிறிஸ்தவர்களும், பௌத்தர்களும் முஸல்மான்களும் இக் கேவலமான ருஷியச் சமதர்ம இயக்கத்தை, இரத்தப்புரட்சியை ஆதாரமாகக் கொண்ட பயங்கர இயக்கத்தை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட ஓர் ஐக்கிய முன்னணி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

○

### புதியதல்ல

சமதர்மம் என்பது எங்களுக்குப் புதியதல்ல யுகக்கணக்கில், உலக சிருஷ்டி ஆரம்பமான நாள் தொடக்கம் சமதர்மத்தில் ஊறித்திளைத்த தமிழ்மக்களாகிய எமக்கு, சமதர்மத்திற் பிறந்து, சமதர்மிகளாய் வாழ்ந்து, சமதர்மிகளாய் இறந்த ரிஷிகளின் சந்ததியாராகிய எமக்கு, மேனாடுகளில் வெள்ளாடுமேய்த்தவாறு அதில் ஒரு பாடம், இதில் ஒரு பாடம் படித்துவிட்டு எல்லாம் கற்றோமென்று ருஷிபக் கோஷங்கள் சிலவற்றை மனனம் செய்துவிட்டு இங்கேவந்து சிலவாலிபர் சமதர்மம் போதிக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள், முதலாளிவர்க்கம் ஒழிக, ஏகாதிபத்தியம் வீழ்க என்று சொன்னதைச் சொல்லுங் கிளிப்பிள்ளைகள் போல இவர்கள் கூற, ஓர்சிலர் இக்கோஷங்களைக் கத்தித் திரிகின்றனர். முதலாளி என்றால் என்ன? என்பதன் அர்த்தம் தெரியாமல் கும்மாளம் போடும் இவர்களின் மௌட்டீகத்தை என்னென்றெடுத்துரைப்பது! "பிளாக் மார்க்கெற்" முறைகளாலும், வேறும் பலவழிகளாலும் பணம் சம்பாதித்துள்ள சிலரும் இச்சமதர்ம இயக்கத்தில் சேர்ந்திருப்பது தான் வேடிக்கை.

○

### எம் குறைகள்!

எங்கள் நாட்டிலே பலவிதமான குறைகள் உண்டு என்பதை மறைப்பதற்கில்லை. நாட்டு மக்களின் பொருளாதார நிலைமை மிகவும் கேவலமாயிருக்கின்றது. ஓர்காலத்தில் கழனிகளாகக்கிடந்த பூமிகள் இன்று காடாய்க் கிடக்கின்றன. சுவாசிக்கும் காற்று ஒன்றைவிட, மற்றும் ஜீவியப் பொருள்கள் யாவற்றுக்கும் நம் அந்நிய நாடுகளையே எதிர்பார்க்கிறோம். இதன் பயனாக, இந்தநாட்டில் இருக்கவேண்டிய பணம் முழுவதும் அந்நிய நாடுகளுக்குச் செல்கின்றது இந்தக்கேவலமானநிலையை அடியோடு மாற்றுதல் வேண்டும். விவசாயத்தை விருத்திசெய்தல்வேண்டும். கைத்தொழில்களை நிர்மாணிக்க வேண்டும். நாடெங்கும் கல்விக் கழகங்கள் நிறுவவேண்டும் ஜனங்களின் சன்மார்க்க நிலையை உயர்த்துதல் வேண்டும்; மக்களின தீயவொழுக்கத்துக்கு முதற் காரணமான மதுவரக்கனை நாட்டினின்றும் விரட்டியோட்ட வேண்டும் இவற்றைச் செய்தால், நாடு தானாகவே முன்னேறும்; இவற்றில் எவ்வித புலனும் செலுத்தாது, தேர்தற் காலங்களில் மாத்திரம் சமதர்மக் கோஷம் செய்து, மக்களின் மனக்கிளர்ச்சியைத் தூண்ட முன்வரும் சமயசந்தர்ப்ப வாதிகளில் தமிழ்மக்கள் எச்சரிக்கையாயிருத்தல்வேண்டும்.

○

### தமிழ்மக்களுக்கு

இந்த யாழ்ப்பாணத்திலே பலவிதமான சங்கங்களும் சபைகளும் காலத்துக்குக் காலம் தோன்றி மறைந்துவிட்டன, யாழ்ப்பாணச் சங்கம், தமிழர் மகாஜனசபை, வட இலங்கைத் தேசிய சங்கம், தேசிய தமிழர் சங்கம், என்னும் ஸ்தாபனங்கள் யாவும் அரசாங்கசபைத் தேர்தல் என்னும் பாறையில் மோதி இருந்தவிடம்தானும் தெரியாமல் மறைந்துவிட்டன. இலங்கையில் தமிழ்மக்கள் எல்லார்க்கும் பொதுவாக இருக்கவேண்டிய தமிழ்க் காங்கிரசும், துர் அதிர்ஷ்டவசமாக தமிழ்மக்கள் எல்லார்க்கும் பிரதிநிதித்துவமுடையதாக இப்போது இருக்கவில்லை தேர்தற் பூசல்களில் காங்கிரஸ் ஈடுபட்டமையைக் காரணமாகக் கொண்டு, அதில் அங்கத்துவம் வகித்தவர்களிற் சிலர் விலகிவிட்டனர் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் ஈடுபட்டது சரியா அன்றா என்பதை இச்சந்தர்ப்பத்தில் நாம் கூறமுடியாது, வடமாகாணத்திலும், கீழ்மாகாணத்திலும் எல்லாமாக 16 ஸ்தானங்கள் உண்டு. இந்த 16 ஸ்தானங்களும்தமிழ்மக்களாலேயே அநேகமாக நிரப்பப்படும் தமிழ்க்காங்கிரஸ தேர்தலில் ஈடுபட்டது சரியாபிழையா என்பது இன்னும் சிலதினங்களில் நிகழவிருக்கும் தேர்தலினால் அறியலாகும். ஆனால் தமிழ்மக்களுக்கெனத் தனிப்பெரும ஸ்தாபனமாக ஏற்பட்ட இக்காங்கிரசில், இலங்கைவாழ் தமிழ்மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்திருக்காமை உண்மையில் துக்கத்திற்குரிய வோர் விஷயமாகும்.

○

### பெரிய குறை

எங்கள் நாட்டில் உள்ள பெரும் குறை என்னவெனில், ஓர் ஸ்தாபனத்தில் நாம் அமைதியாகக் கட்டுப்பாடாக இருக்கத் தெரியாமையே. அந்த ஸ்தாபனத்தில் நாம் சிறுபான்மையினராகவிருக்க எங்கள் அபிப்பிராயத்தைப் பெரும்பான்மையினர் கைக்கொள்ளாவிட்டால், நாம் உடனே அதனைவிட்டு விலகிவிட்டு, அந்த ஸ்தாபனத்துக்கெதிராகக் கருமம் ஆற்றுகிறோம். அதற்குள்ளேயே இருந்துகொண்டு எம் அபிப்பிராயத்துக்கு மற்றவர்களைத் திருப்ப வழிவகை தேட நாம் முயற்சிப்பதில்லை இதன்பயனாக நாமும் பலம் குறைகிறோம். அந்த ஸ்தாபனமும் பலம் குறைகின்றது. மற்றவர்கள் எள்ளி நகையாட நாம் இடம் கொடுக்கின்றோம் இந்தக் கேவலமான நிலைமை எப்போது ஒழியுமோ, அப்போதுதான்தமிழ்மக்கள் உண்மையான விமோசனம் அடைவர்.

○

### சமசமாஜிகள் எங்கே?

எங்கள் இலங்கைச் சமசமாஜத் தோழர்கள் இப்போதுசிலகாலமாக மவுனம் சாதிப்பது பலவிதசந்தேகங்களுக்கிடமாயிருக்கின்றது புலி பதுங்குவதும், சமசமாஜிகள் உறங்குவதும் நன்மைக்கல்ல என்று நேற்று ஒருவர் கூறினார். இதனை இலங்கையரசாங்கமும் நன்கு உணருகிறது என்பதை சென்றவாரம் பொலிஸபகுதித்தலைவர் மிஸ்ரர் அலுவிஹாரையின் கூற்றிலிருந்து ஒருவாறு யூகிக்கக் கிடக்கின்றது. பாராளுமன்றத் தேர்தற் காலத்தில்தான் வேலைநிறுத்தங்களை ஏற்படுத்துவதென்று சமசமாஜிகள் ஆரம்பத்தில் திட்டம்போட்டிருந்தனர் என்றும், அவர்கள் எதிர்பார்த்திருந்ததற்கு முந்தியே வேலைநிறுத்தங்கள் ஏற்பட்டு அவர்களின் நினைவுகளைக் கனவுகளாக்கிவிட்டன என்றும் ஓர்சாரார் கூறுகின்[illegible] லும் அரசாங்கம் இப்போதிலும் பார்க்கக் [illegible]

கூடியவிதமாக, ஜாக்கிரதையாக இருத்தல் அவசியம். உணவுப் பொருள்கள் மக்களுக்குத் தட்டுப்படாதவகையிலும், புகைரத மார்க்கமாக ஜனங்கள் பாதுகாப்புடன் சஞ்சரிக்கும் வகையிலும் தகுந்த ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டும்.

---

## டக்ரர் எஸ.எப். செல்லப்பா

வைத்திய சுகாதாரப் பகுதித் தலைவரான டக்ரர் எஸ் எப் செல்லப்பா இன்னும் ஓர் ஆண்டு காலத்துக்குக் கடமை பார்க்கலாம் என்று தேசாதிபதி தீர்மானித்துவிட்டார். இந்த வருஷத்துடன் டக்ரர் செல்லப்பா பதவியினின்றும் விலகி, இளைப்பாறவேண்டும் எனச் சுகாதாரப் பகுதி மந்திரி மிஸ்ரர் ஜோர்ஜ் ஈ டி சில்வா சிபாரிசு செய்தார் தங்களைக் கலந்தாலோசிக்காமல் மந்திரி இப்படிச் சிபார்சு செய்தமை பிழை என்று சுகாதாரப்பகுதி நிருவாகசபையினர் தீர்மானித்தனர். இவ் விஷயம் இதன்பின்னர்த் தேசாதிபதியின் பார்வைக்கனுப்பப்பட்டது.

டக்ரர் செல்லப்பாவுக்கு இப்போது வயது *58*, இவர் *1918*ம் ஆண்டில் உத்தியோகத்தில் அமர்ந்து, *1941*ம்ஆண்டில் வைத்திய சுகாதாரப் பகுதித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

---

40 ம் "நம்பரும்" அதற்குக் கீழுள்ளதுமான கைத்தறிப் புடைவைகளுக் கெல்லாம் இனிக் கட்டுப்பாடு கிடையாதென்று துணிக்கட்டுப்பாட்டதிகாரி ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரும் துணிகளில் 100 க்கு 65 விகிதமானவை கைத்தறிப் புடைவைகளேயாம். இவற்றில் 100 க்கு 91 விகிதம் 40-ம் நம்பருக்குக் கீழ் உள்ள துணிகளாகும்.

# எதற்கும் தயார்!

## பொலிசாரும் தேர்தலும்

தேர்தற்காலம் சமீபிக்கிறது. இக்காலத்தில் எவ்விதமான நிலைமை ஏற்பட்டாலும் அதனைச் சமாளிக்கப் போலிசார் தயாராகவிருக்கின்றனர் என்று போலிஸ் பகுதித் தலைவர் மிஸ்ரர் ஆர் அலுவிகாரை ஓர் பத்திரிகை நிருபர்க்குக் கூறியுள்ளார்,

வருகிற தேர்தலில், அபேட்சகராகவருபவர்கள் ஒவ்வொருவருக்கும் தம் பிரசாரணத்தைச் செய்யவும், தம் தேர்தல் விஷயங்களைக் கவனிக்கவும் நியாயமான முறையில் வேண்டியசந்தர்ப்பங்களையும் வசதிகளையும் செய்துகொடுக்க தாம் தயாராக விருப்பதாக மிஸ்ரர் அலுவிகாரை கூறினர். மேலும் அவர் கூறியதாவது:—

"தேர்தற் காலத்தில் ஏதும் குழப்பங்கள்நிகழும் என நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் ஏதும் குழப்பங்கள் நேர்ந்தால் அவற்றை அடக்கிச் சமாதானத்தை நிலைநாட்டப் போலிஸ் பகுதி தயாராகத்தான் இருக்கிறது. தேர்தற் காலத்தில் ஏதும் காடைத்தனம் நிகழுமானால், வாக்காளர்களைப் பயமுறுத்தும் சண்டித்தனங்கள் தலையெடுக்குமானால், அவற்றை ஈவிரக்கமின்றி அடக்க நாம் தயார். அதுவுமன்றி எதிர்க் கட்சியினரின் கூட்டங்களைக் குழப்பச் சின்னத்தனமான முறைகள் யாராலாவது கையாளப்படுமானால், அவற்றையும் நாம் தடுப்போம்.

"தேர்தற்காலத்தில் நிலைமையைச்சமாளிப்பதற்கு இப்போதுள்ள போலிசாரின் தொகை போதுமானது என்பதே எனது நம்பிக்கை. *6* மாதத்திற்குமுன் *700* புதியவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் அவர்களின் பயிற்சிக்காலம் இம் மாதத்துடன் முடிய, அவர்களும்போலிஸ் கடமைகள் புரிவர்."

---

இந்திய அரசியல்

# அதிகாரம் மாற

## பாராளுமன்றத்திற் சட்டம்

### இந்திய சுதந்திர மசோதா

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் சுதந்திரத்தை நல்குவதற்கான மசோதா சென்ற வெள்ளிக்கிழமை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இந்தியாமந்திரி லிஸ்தோவல் பிரபுவினால் சமர்ப்பிக்கப்பட்டது. வருகிற வியாழக்கிழமை இது சம்பந்தமான விவாதம் பாராளுமன்றத்தில் நிகழும்: இந்த மசோதாவின் அம்சங்கள் வருமாறு:

1. 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ம் திகதி இந்தியாவும் பாகிஸ்தானும் சுயராச்சிய அந்தஸ்தை யடையும்

2. பாகிஸ்தான் என்பது சிந்து, மேற்குப் பாஞ்சாலம். கிழக்கு வங்காளம், பலுக்கிஸ்தானம் என்பனவற்றுடன் வடமேற்கெல்லைப்புறம், அசாம் மாகாணத்தில் உள்ள ஸில்கெற பகுதி என்பனவு விரும்பினால் சேர்ந்துள்ள பிரதேசமாகும்.

3. இன்று பிரிட்டிஷ் இந்தியா எனப்படுவது இந்தியப் பிரதேசமாகும்

4. பாகிஸ்தான் இந்தியா என்றும் இரு தேசங்களுக்கும் பொதுவாக ஒரு "கவர்னர் ஜெனறல்" இருப்பார். ஆனால், இவற்றில் ஒன்றாவது, தனக்கு வேறான "கவர்னர் ஜெனரல்" இருக்க வேண்டும் என்று விரும்பினால், இரண்டு பகுதிகளுக்கும் தனித்தனி "கவர்னர் ஜெனரல்" இருப்பர்,

5. உள்நாட்டு விவகாரங்கள் சம்பந்தமாகவோ வெளிநாட்டு விவகாரங்கள் சம்பந்தமாகவோ, எந்த விதமான சட்டமியற்றுவதற்கும் இந்தியாவுக்கும்; பாகிஸ்தானுக்கும் பூரண அதிகாரமும் உரிமையும் இருக்கும். பிரிட்டிஷ் சட்டத்துக்கு விரோதமாகவும் சட்டங்கள் இயற்ற இந்த இரண்டு பிரதேசங்களுக்கும் பூரணமான அதிகாரம் உண்டு

6. இன்று பிரிட்டிஷ் இந்தியா எனப்படும் பிரதேசத்தில், ஆகஸ்டு மாதம் 15ம் திகதியுடன், பிரிட்டிஷ் அரசாங்கம் எந்த வகையிலும் பரிபாலனப் பொறுப்பு ஏற்கமாட்டாது

7. மாகாணச்சட்ட சபைகள் செய்யும் சட்டங்களை நிராகரிக்கப் பிரிட்டிஷ் மன்னர்க்கு உரிமை கிடைக்கமாட்டாது.

8. இப்போதுள்ள இந்திய ராணுவம் இந்தியா, பாகிஸ்தான் என்பவற்றுக்கிடையே பிரிக்கப்படுதற்கான சகல கருமங்களையும் "கவர்னர் ஜெனரல்" செய்வார். ராணுவப் பிரிவினை முடியும்வரை அந்த ராணுவத்தின் ஒழுங்கையும் சீரையும்நிலைப்படுத்த வேண்டிய கருமங்களைக் "கவர்னர் ஜெனறல்" செய்வார்.

9. பாகிஸ்தான், இந்தியா என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டபின், பாகிஸ்தானிலோ, இந்தியாவிலோ, அல்லது இரண்டு பிரதேசங்களிலுமோ பிரிட்டிஷ் ராணுவம் இருந்தால், அந்த ராணுவத்தின் பரிபாலனம் பிரிட்டிஷ் பொறுப்பில் இருக்கும் அன்றி, அதன் பரிபாலனம் இந்தச் சுதந்திரச் சட்டத்தினால் எவ்வாற்றானும் பாதிக்கப்படமாட்டாது.

10. இந்தியா, பாகிஸ்தான் என்ற இரண்டாகப் பிரிக்கப்பட்டுச் சுதந்திரம் வழங்கப்பட்டபின், அந்தப் பிரதேசங்களின் மீது பிரிட்டிஷ் பாராளுமன்றம் எந்தவிதமான அதிகாரமும் வைத்திருக்கமாட்டாது.

இவைதான் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்திய சுதந்திர மசோதாவின் பிரதான அம்சங்கள் என்க. இந்த மசோதா வருகிற வியாழக்கிழமை இரண்டாம் முறையாக அதிக எதிர்ப்பின்றி நிறைவேறிவிடும் என்று எதிர்பார்க்கலாகும்.

●

### புதிய இந்திய அரசியல் அமைப்பு

இது இவ்வாறாக, இந்திய அரசியல் நிர்மாணசபை, இந்தியச் சமஷ்டி அரசியல் அமைப்பை இப்போது உருவாக்குவதில் கவனம் செலுத்தி ஓர் திட்டத்தை வகுத்திருக்கிறது. அத் திட்டத்தின்படி இந்தியச் சமஷ்டியில் பொதுமக்கள் சபை என ஓர் சபையும் அரசாங்கசபை என ஓர் மேற்சபையும் இருக்கும் இச்சமஷ்டி யரசியலின் தலைவர் ராஷ்டிரபதி என அழைக்கப்படுவர். இந்தியச் சமஷ்டி யரசியற் பாராளு மன்றத்தில் இருசபைகளும்,

தொடர்ச்சி 4ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரம் மாற

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணச் சட்டசபைகளாலுமே ராஷ்டிரபதி தெரிந்தெடுக்கப்படுவார். ராஷ்டிரபதியின் தேர்தல் இரகசிய முறையில் நிகழும் ராஷ்டிரபதியின் உத்தியோக காலம் 5 ஆண்டுகள். இதற்கிடையில் அவரை நீக்குதற்குப் பிரமாணங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. 35 வயதுக்குக் குறைந்த எவரும் ராஷ்டிரபதியாக இருக்க முடியாது. உதவி ராஷ்டிரபதி இந்தியச் சமஷ்டியின் இருசபைகளால் மாத்திரமே தெரிவு செய்யப்படுவார். இந்தியச் சமஷ்டி அரசியலின் நிர்வாகத்துக்கு ராஷ்டிரபதியே பொறுப்பாளியாக இருப்பர். இந்திய பொதுமக்கள் சபையில் 300 அல்லது 400 அங்கத்தவரும் மேற்சபையில் 200 க்கு மேற்படாத அங்கத்தவரும் இருப்பர்.

●

### மாகாண அரசியல் அமைப்பு

மாகாண அரசியல் அமைப்பு விஷயமாகவும் அரசியல் நிர்மாணசபை ஓர் திட்டம் தயாரித்து வைத்திருக்கிறது. மாகாணச் சட்டசபைகள் சர்வஜன வாக்குரிமைப்படிக்குத் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்டிருக்கும். மாகாணத் தேசாதிபதிகள் ஜனங்களால் தெரிவு செய்யப்பட்டவரா யிருப்பர். மாகாணத் தேசாதிபதி நாலு வருடகாலம் கடமை பார்ப்பார். இதற்கிடையில் அவரை நீக்குதற்குப் பிரமாணங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. தேசாதிபதிக்கு அநேக அதிகாரங்கள் வழங்கப்படும். தேசாதிபதி பொதுஜனங்களால் தெரிந்தெடுக்கப் படுபவர் ஆனபடியினால், அவர் தம்முடைய அதிகாரங்களைத் துர்விநியோகப் படுத்த மாட்டார் என்று அரசியல்நிர்மாண சபையின் விசேஷசபை சிபாரிசு செய்கின்றது.

●

### சமஸ்தானங்களின்நிலை

பிரிட்டிஷ் இந்தியா விஷயமாகத்தான் மேலே காட்டிய விதிகள் அமையும். சமஸ்தான இந்தியா—அதாவது சிற்றரசர்களாற் பரிபாலிக்கப்படும்சமஸதானங்கள்விஷயத்தில், அவை விரும்பினால் இந்தியாவுடன் சேரலாம்; அல்லது பாகிஸதானுடன் சேரலாம்: ஆனால் அவற்றை இவ் விஷயமாக நிர்ப்பந்திக்க பிரிட்டிஷ் அரசாங்கம் இணங்காதாம் இச்சுதேச சமஸதானங்கள் தனித்து நின்று சுயராச்சியம் அடையலாமாம் ஆனால் உலகம் உள்ளநிலையில் இச்சமஸ்தானங்கள், ஒன்றில் இந்திய சமஷ்டியுடன் அல்லது பாகிஸ்தானுடன் சேர்ந்து கொள்ளுதல் நலம் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் புத்திமதி கூறுகின்றது.

●

### பாகிஸ்தான் அரசியல் நிர்மாணசபை

பாகிஸ்தான் அரசியல் நிர்மாணசபையின் அங்குரார்ப்பணக்கூட்டம் இம்மாதம் 14-ம் திகதி கராச்சியில் ஆரம்பமாகும் இந்திய அரசியல் நிர்மாண சபையின் அடுத்த கூட்டமும் இதே திகதியில் புதுடெல்லியில் நிகழும்.

●

### மேற்கு வங்காள மந்திரிகள்

பிரிக்கப்பட்ட மேற்கு வங்காளத்திற்கெனப் பின்வருவோர் மந்திரிகளாகக் காங்கிரஸ் அதிகார பீடத்தால் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்: டக்டர். பீ ஸீ கோஷ், டக்ரர் ஷியாம் பிரஸாத் முக்கர்ஜி, டக்ரர் பீதான் சந்திரராய், டக்ரர் ஹேமச்சந்திரநஷ்கர், டக்ரர் சுரேஷ் சந்திரபனர்ஜி, ஸ்ரீ சரத் சந்திர பண்டரி, ஸ்ரீமோஹினிமோஹன்பர்மன். ஸ்ரீ நிரேந்திர நாராயண முக்கர்ஜி ஸ்ரீபீமல் சந்திரசின்ஹா, ஸ்ரீகாளிபாதமுக்கர்ஜி. ஸ்ரீராத நாத்தாஸ், ஸ்ரீமுகுந்தபிகாரிமைத்ரி.

இந்த மந்திரிகள் இப்போது வங்காளத்தில் ஷூராவர்த்தி மந்திரி சபையில் இருந்து மேற்கு வங்காளத்துக் குரிய நிர்வாகத்தைச் செய்வர்.

●

### எல்லைப்புறத் தகராறு

வடமேற்செல்லைபுறமாகாணம் இன்று ஓர் பிரச்சினையாக இருக்கிறது. அங்கே வசிப்பவர்கள் பட்டாணியர். அவர்கள் மதத்தில் இஸலாமியர் ஏனைய இந்திய இஸலாமியருடன் எவ்வகையிலாவதுதொடர்புடையவர் அல்லர். அவர்கள் பலகாலத்துக்குமுன் ஆப்கானிஸதானத்துடன்சேர்ந்தவர்கள். பிரிட்டிஷார் வந்தபின், எல்லைப்புறம் பிரிட்டிஷ் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது அந்த எல்லைப்புறம் தனிச் சுயராச்சிய நாடாகவேண்டும் என்று கான் அப்துல் கபார்கான் கூறி, பாகிஸ்தானுடன் ஒத்துழைக்க மறுக்கின்றார். பிரிட்டிஷார் முஸ்லிம்லீக்குடன் சேர்ந்து அம்மாகாணத்தைப்பாகிஸ்தானுடன்சேர்க்க முயன்று இதற்கென ஓர் போலி வாக்கெடுப்பையும் நடத்தப்போகின்றனர். இதற்கிடையில் ஆப்கானிஸ்தானம், எல்லைப்புறத்தைத் தன்னுடன் சேர்க்கவேண்டும் என்று பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு உத்தியோகதோரணையில் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. இந்த வேண்டுகோளுக்கிணங்கமுடியாது என்றும், வாக்கெடுப்பின்மூலம் எல்லைப்புற மக்கள் எதனை விரும்புகின்றனரோ அதனையே செய்ய முடியும் என்றும் பிரிட்டிஷ் அரசாங்கம் கூறுகிறது எல்லைப் புறத்தை ஆப்கானிஸதானம் இப்போது கேட்பது ருஷியாவின் தூண்டுதலின் பேரிலேயே என்று பிரிட்டிஷ் அரசியல் வாதிகள் கூறுகின்றனர்.

●

### இடைக்கால அரசாங்கம்

முன் செய்துகொண்டிருந்த ஏற்பாட்டின்படி, இடைக்கால அரசாங்கத்தில் அங்கம் வகித்துள்ள பண்டித ஜவஹர்லால் நேருவும் ஏனைய மந்திரிகளும் தப் பதவிகளை விட்டு நீங்கும் பத்திரங்களை இராஜப்பிரதிநிதியிடம் சமர்ப்பித்துவிட்டனர் இனி மந்திரசபை புதிதாக அமைக்கப்படும். முந்தியிருந்தவர்களே மீண்டும் மந்திரிகளாகவிருப்பர்! ஆனால் லீக் பிரதிநிதிகளாக விருப்பவர்கள் பாகிஸ்தான் பிரதேச விஷயங்களை மட்டுமே கவனிப்பர் காங்கிரஸ் பிரதிநிதிகள் இந்திய விஷயங்களைக் கவனிப்பர். ஆகஸடுமாதம் 15-ம் திகதி வரைக்கும் [illegible] இருக்கும்.

## காரைநகர் கருங்காலிச் சுப்பிரமணிய சுவாமி ஆலயம்

நிகழும் ஆனி 30-ம் திகதி (14-7-47) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி வரையில் திருநாவுக்கரசு நாயனர் புராணபடனப் பூர்த்திவிழா நடைபெறுமெனவும், அத்தருணம் ஆலய அபிவிருத்தியின் பொருட்டுச் சைவ அன்பர்களின் மகாகூட்டம நடைபெறுமெனவும், ஆசிரியர் திரு. பொ. நவரத்தினம் M. A. அவர்கள் தலைமை வகிக்க, ஸ்ரீமத். சி. சுப்பிரமணிய தேசிகர் 'ஆலய பரிபாலனம்" என்னும் விஷயமாக உபந்நியாசஞ் செய்வா ரெனவுந் தெரிவிக்கப்படுகின்றது.

---


## விளம்பரம்

கிளிநொச்சிக் கலனிக் குடியேற்றத்தில் வீடுகள் கட்டும் இடங்களில் ஏறக்குறைய 6000 புசல் சூளைச் சுண்ணும்பு கொடுப்பதற்கு 1947-ம் ஆண்டு ஜூலை மாதம் 29 ந் திகதி 12 மணி வரைக்கும், கொழும்புத் திறைசேரியில் றெண்டர் போட் சேர்மன் அவர்கள் றெண்டர் ஏற்றுக் கொள்வார்கள். றெண்டர் ரூபாய் 100 பணங்கட்டி வடமாகாண ஏஜண்டரிடம், 26-7.1947 க்கு முன், பெற்றுக் கொண்ட போம்களில் எழுதப்படவேண்டும். மறு விபரங்களை அவரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

G 61 8, 11, 15-7-47


---

## கடிதர்க்கு விஞ்ஞாபனம்

இப்பத்திரிகைக்குக் கடிதங்களையும் ஏதும் சமாசாரங்களையும் எழுதி யுதவும் அபிமானிகள், சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் என்ற முறையை இயன்றவரையில் அநுசரித்து,தாளின் ஒருபக்கத்தில் மாத்திரம் தெளிவாக எழுதியனுப்புதல் வேண்டும். அபிமானிகள் எழுதியனுப்பும் கடிதங்களைத் தொகுக்கவும் திருத்தவும் மிகையானவற்றைத் தவிர்க்கவும், தகாதனவெனக் கண்டவற்றை ஒதுக்கவும் பத்திரிகாசிரியர்களுக்கு அதிகாரமுண்டென்பதையும், இப்பத்திரிகையை ஆதரியாதவர்கள் வெளியிடும்படி எழுதியனுப்பும் கடிதங்கள் இடம்பெறுவேனென்பதையும் அன்பர்கட்குத் தெரிவிக்கின்றேம்.

—பத்திராசிரியர்.

# சேர். துரைசுவாமிக்கு ஆதரவு

## காரைநகரிற் கூட்டம்

சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி, தீவுப்பகுதித் தொகுதியில் அபேட்சகராக வருவதை ஆதரிப்பதற்காக சென்ற 5-7-47 சனிக்கிழமை, காரைநகரில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலை மண்டபத்தில் ஓர் பெரிய கூட்டம் நிகழ்ந்தது. கூட்டத்துக்கு முன், சேர். துரைசுவாமியும் ஏனைய தலைவர்களும் தபாற்கந்தோர்ச் சந்தியிலிருந்து ஊர்வலமாக ஷை வித்தியாசாலை மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இளைப்பாறிய டிஸ்திறிக் நீதிபதி திரு. வ. ஆர். சுப்பிரமணியம் கூட்டத்துக்குத் தலைமை வகித்து 40 ஆண்டு காலமாக சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி இந்நாட்டுக்கு ஆற்றிய சேவைகளைப் பலபட விரித்துரைத்தார்.

அடுத்தபடியாகப் பேசிய யாழ்ப்பாணம் நகரசபைத் தலைவர் திரு. க. பொன்னம்பலம், பிரிட்டிஷ் அரசியற் சம்பிரதாயப்படி, அரசாங்கசபையிலோ, பாராளுமன்றத்திலோ தலைவராக இருப்பவரைப் போட்டியில்லாமல்மீண்டும்அனுப்பவேண்டும்என்றுதெரிவித்தார் இப்போதும் சேர் துரைசுவாமியைத்தெரிந்து அனுப்பினால், அவரை மீண்டும் பாராளுமன்றத் தலைவராக்குதற்கு மிஸ்ரர் சேனநாயக்காவும் ஏனைய சிங்களத் தலைவர்களும் தயாராகவிருக்கின்றனர் என்பதைத்தான் நிச்சயமாகக் கூறமுடியும் என்று ஸ்ரீ பொன்னம்பலம் கூறி, சேர் துரைசுவாமிக்கு விரோதமாகத் தமிழ்க் காங்கிரஸ் நிற்பதிலிருந்து அதன் கேவலமான நிலைமை புலப்படும் என்று குறிப்பிட்டு மேலும் கூறியதாவது:

"இன்று தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா" என்று பரக்கப் பேசும் தமிழ்க்காங்கிரஸ் வாதிகள் படிப்பது தேவாரம் இடிப்பது தேவாலயம் என்றுங்கு கருமம் ஆற்றுகிறார்கள். தமிழ் மக்களுக்கு ஓர் அணிகலம் என விளங்கும் ஓர் தமிழ்மகன், எங்கள் தமிழ்ச் சாகியத்தாரின் தலைப்பாகை தரித்துப் பாராளுமன்றத்திலே தலைமைப் பதவி பூண்டு எமக்கெல்லாம் பெருமிதம் தருவது இத் தமிழ்க் காங்கிரஸ் வாதிகளுக்கு வயிற்றெரிச்சலாகவிருக்கிறது. (சபையில் இருந்து வெட்கம்! வெட்கம் என்ற ஆரவாரம்) இலங்கையின் முதற் பாராளுமன்றத்திலே, இலங்கை மக்கள் அகங்குளிர, தமிழ்மக்கள் ஆநந்தமடைய, உலக மக்கள் மரியாதை செலுத்த ஓர் தமிழ் மகன் வீரத் தமிழ் மக்களின் புராதன தலைப்பாகையை அணிந்துகொண்டு இருப்பது தமிழ்க் காங்கிரசார்க்குப் பொறுக்கவில்லை. சிங்களர், தமிழர் என்ற வகுப்புவாத நஞ்சைக்கக்கி, பொய் புழுகுகளை அளந்து கொட்டுகிறார்கள் தமிழ்க் காங்கிரசார், இந்த வகுப்புவாதப் பிரசாரத்தினால் ஸ்ரீ ஜீ. ஜீ. பொன்னம்பலம் தமிழ் மக்களை அரசியலநாதைகளாக்கக் கங்கணம் கட்டி நிற்கிறார்".

ஸ்ரீ சாம். சபாபதி அடுத்தபடியாகப் பேசினார்: அவர் கூறியதாவது:

"இந்தியாவில் மத்திய சட்டசபைத் தலைவராகவிருந்த காங்கிரஸ்வீரர் வித்தல்பாய் படேல் தாமும், பிரிட்டிஷாருடைய சம்பிரதாயப்படிக்கே தம் உடையைத் தலைவராயிருக்கையில் வகுத்திருந்தார். ஆனால் சேர். வைத்தியலிங்கம் சுவாமியோ,அரசாங்கசபையின் தலைவராகப்பதவிவகிக்கையிலும் தாம் ஓர்வீரத்தமிழன் என்பதை அகில உலகுக்கும் காட்டுதற்காக எங்கள் தலைப்பாகையைத்தான் அணிந்திருந்தார். அப்படிச் செய்தமை எங்கள் எல்லாருக்கும் பெருமிதத்தை அளிக்கவில்லையா"

நியாயவாதி திரு. எஸ். ஆர். கனகநாயகம் பேசுகையில் "கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானும் தன் பொல்லாச் சிறகை" விரித்தாடிய தன்மைபோல இந்தியாவிலேதேசிய விழிப்புக்குக்காரணமாய், இந்திய மக்கள் யாவர்க்கும் ஒரே ஸ்தாபனமாகவுள்ள காங்கிரஸ் மகாசபையைப்போன்றதுதான் இத்தமிழ்க் காங்கிரசும் என்றுகூறிப் பொதுமக்களை ஏமாற்றி, அந்தக் காங்கிரஸ ஸதாபனத்துக்குரிய மூவர்ணக் கொடியைப் பிடித்துக் கொண்டு திரிகிறது. இத் தமிழ்க்காங்கிரஸகாரர் சிலர் காந்திக் குல்லாக்களும் அணிகின்றனர். அந்தோ! இது என்ன [illegible] வைத்தியலிங்கம் துரைசுவாமியையே தீவுப்பகுதிப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யவேண்டுமென்ற தீர்மானம் ஒன்று ஸ்ரீ கே எஸ சோமசுந்தரம அவர்களால் எடுத்தாண்டு, இளைப்பாறிய தபாற்கந்தோ ரதிபர் ஸ்ரீ எஸ வேலுப்பிள்ளை அவர்களால் அநுவதிக்கப்பட்டது. தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. ஸ்ரீமான்கள் எஸ ஏ கணபதிப்பிள்ளை, எஸ. வேலுப்பிள்ளை, கே எஸ. வேலுப்பிள்ளை, பண்டிதர் எம். நல்லதம்பி, இ மருதையனர், (வேலணை கிராமச்சங்கத் தலைவர்) எஸ். வைத்தியலிங்கம் என்பவர்களும் பேசினர்.

சேர். துரைசுவாமி தன் கொள்கைகளை விபரித்துப் பேசினர்.

# திருச்சி ரேடியோ

புதன் யூலை 9

காலை 7-15 தோரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7 30 கல்லிடைக் குறிச்சி ஏ பாலசுப்பிரமணியபாகவதர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 ரேடியோ வாத்ய இசை 8-30 சுலோசனா பட்டாபிராமன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சுலோசனா பட்டாபிராமன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 சுலோசனா பட்டாபிராமன் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 திருவாளப்புத்தூர் கிருஷ்ண மூர்த்திபிள்ளை வயலின் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள 7 முதன்மை நாடகம் 7-15 வாணிபப் பயிர்கள் 7-30 தமில் செய்திகள் 7-45 எம் யு ஏ வீ வாத்ய கோஷ்டி 8 கல்லிடைக் குறிச்சி ஏ பாலசுப்பிரமணிய பாகவதர் பாட்டு 8 திருவாளப்புத்தூர் கிருஷண மூர்த்தி பிள்ளை வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 புத்தக விமர்சனம் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

வியாழன் யூலை 10

காலை 7 15 தோரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7-30 எஸ் கோமளம் எஸ் ஸ்ரீநிவாஸ் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 குரல்வகை இசைத்தட்டு 8-30 டி பச்சைபப்பா பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 வி கனகசுந்தரம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 வி கனகசுந்தரம் பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 எஸ் கோமளம் எஸ ஸ்ரீநிவாஸ் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 கிளாரினெட் இசைத்தட்டு 7-15செய்தி விளக்கம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 தஞ்சாவூர் கே பி சிவானந்தம் வீணை 8-30 நாட்டுப் பாடல்கள் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 சித்ரகானம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9 45 டி பச்சையப்பா பாட்டு 10-30 முடிவு.

வெள்ளி யூலை 11

காலை 7 15 தோரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7 30 பி எஸ் நடராசன்பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சி வாத்ய கோஷ்டி 8-30 வி அபயாம்பாள் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-50 போலகம் ஏ கே சாம்பசிவன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 போலகம் ஏ கே சாம்பசிவன் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 வீ அபயாம்பாள் பாட்டு 5-40 குரான் ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 நாகபட்டணம் பி எல் ஜி எம் சிவசுப்பிரமணியம் சகோதரர்கள நாகஸ்வரம் 7 30 தமிழில் செய்திகள 7-45 இலக்கியத்தில் புது முறைகள் 8 பி எஸ் நடராசன் பாட்டு 8-30 நாகபட்டணம் பி எல் ஜி எம் சிவசுப்பிரமணிய சகோதரர்கள் நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 எம் கே தியாகராமபாகவதர் இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-45 எச் எ மத்வாச்சார் கோட்டுவாத்தியம் 10 நீங்கள் கேட்டவை 10-30 முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புக்கள்

2ம் பக்கத் தொடர்ச்சி

இப்போது இலங்கையில் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீஜுத் வி. வி. கிரி ஓர் பழுத்த அரசியல்வாதி. சிறந்த இராசதந்திரி; தியாகக்கனலில் மூளைத்தெழுந்த தேசாபிமானி; இவருடைய உத்தியோககாலம் முடிவதற்கிடையில் இலங்கைவாழ் இந்தியர் பிரச்சினை, இலங்கை, இந்தியா என்னும் இருநாடுகளுக்கும் திருப்திகரமான முறையில் தீர்க்கப்படும் என எதிர்பார்க்கிறோம்.

***

## ஓர் அநியாயம்

பாடசாலை முகாமைக்காரராகவுள்ளவர்கள், சோல்பெரித் திட்டத்தின்படி அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் அபேட்சகராக வர முடியாது என்ற சட்டத்தைக் குடியேற்றநாட்டு மந்திரி இப்போது தவிர்த்துவிட்டார் எனும் செய்தி ஐக்கியதேசியக்கட்சிப் பிரமுகர்களுக்கு அளவிலா ஆநந்தத்தை அளித்திருக்கும் என்று எண்ணுகிறோம். இந்தப் பிரமாணம் தவிர்க்கப்படாதிருந்தால் ஷை கட்சி அபேட்சகர்களில் 23 பேருக்குமேல் தேர்தலில் நிற்கமுடியாது என்பதையுணர்ந்த இலங்கை மந்திரசபையைச் சேர்ந்த ஐ. தே. க பிரமுகர் பிரிட்டிஷ் அதிகாரபீடத்துக்குத் தந்திக்குமேல் தந்தி அனுப்பி இந்த அநியாயத்தை ஒழிக்கவேண்டுமென்று வாதாடி அதில் வெற்றியும் பெற்றுவிட்டனர். இந்தப் பிரமாணத்தைத் தவிர்க்கவேண்டுமென்று அரசாங்கசபை கேட்காமலிருப்பவும், குடியேற்றநாட்டு மந்திரி திருவுளமிரங்கி இதனைத் தவிர்த்துவிட்டார். ஆனால், தேர்தற்காலத்துக்கு முன் 7வருஷத்துக்கிடையில் 3மாதத்துக்குமேல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்கள் பாராளுமன்றத் தேர்தலில் அபேட்சகராக நிற்கவொண்ணாது என்ற பிரமாணத்தைத் தவிர்க்கவேண்டும் என்று அரசாங்க சபை கண்டிப்பாகத் தீர்மானம் இயற்றியிருப்பவும், குடியேற்றநாட்டு மந்திரி நாளிதுவரை, அதனைப்பற்றிச் சிந்திக்காமலிருப்பதற்குக் காரணம் என்ன? அந்தத் தீர்மானத்தைக் குடியேற்ற நாட்டு மந்திரிக்கும் பிரிட்டிஷ் அதிகாரபீடத்துக்கும் சமர்ப்பித்து, அந்த அநியாயப் பிரமாணம் தவிர்க்கப்படவேண்டுமென்று இதுவரை இலங்கை மந்திரசபை ஏதாவது முயற்சிசெய்ததா என்று அறியவிரும்புகிறேம். இந்தப் பிரமாணத்தினல் பாதிக்கப்படுபவர் சமதர்மிகள் தலைவரான டக்ரர் எஸ். ஏ. விக்கிரமசிங்ஹ என்பவராகும். இவருடைய அரசியற் கொள்கைகள் சில எமக்கு உவந்தனவாகாதிருக்கலாம். ஆனல் அந்த அபிப்பிராயபேதங் காரணமாக, அரசாங்கசபையின் தீர்மானத்துக்கு விரோதமாக, ஒருவருடைய உரிமையைப்புறக்கணித்து பாராளுமன்றத்தில் வராமல் செய்வது பேடித்தனத்தின்பாற்பட்டது என்பதே எமது சித்தாந்தமாகும் இந்த விஷயத்தில் இலங்கை மந்திரசபையினரும், குடியேற்றநாட்டு மந்திரியும், டக்ரர் விக்கிரமசிங்ஹாவை அடுத்த பாராளுமன்றத்திற் வராமச் செய்யச் சதியாலோசனை செய்திருக்கின்றனர் என்று பொதுஜனங்கள் கருதுவாரானல், அது பிழையாகுமா? இங்கிலாந்திலே அபேதவாதத்தையும் பரந்த அரசியற் கொள்கைகளையும் கடைப்பிடித்து, குடியேற்ற நாடுகளில் ஏகாதிபத்தியக் கொள்கைகளைக் கைக்கொள்ளும் அட்லி அரசாங்கம் தனது இந்தச் செயலால் இலங்கை மக்களின் அநுதாபத்தை இழந்துவருகிறது என்பதைமாத்திரம் இப்போது எச்சரிக்கைசெய்ய விரும்புகிறேம். இந்த இலங்கை மிஸ்ரர் சேனநாயக்காவுக்கோ, வேறெந்தத் தனி மனிதனுக்கோ சீதனம் அல்லது முதுசொத்தல்ல. மிஸ்ரர் சேனநாயக்காவும் அவருடைய ஐ. தே. கட்சியும் தான் சாஸ்வதமாக இலங்கையில் அதிகாரம் செலுத்தப்போவதில்லை. ஆகவே, வருங்கால இலங்கையின் உண்மையான [illegible] அரசாங்கம் விரும்புமானால், பட்சபாதக முறைகளை விடுத்து, டக்ரர் விக்கிரமசிங்ஹமீதுள்ள தடையை இக்கணமே நீக்கிவிடுமாறு, ஜனநாயகத்தின் பேரால் அட்லி அரசாங்கத்தை வேண்டிக்கொள்ளுகிறேம்.

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க்கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

மேலினி யனைய சேவ்வேள் விரிஞ்சனைச் சுருதிக்கேல்லா
மூலம தாகிநின்ற மோழிப்போருள் வினவி யன்னுன்
மாசறச் சேன்னி தாக்கி வன்சிறைப் படுத்தித்தானே
ஞாலமன் னுயிரை டெல்லா நல்கியே நண்ணும் பன்ஞள்.

இனிமேல் அமமுருகவேள் வேதங்கட்கு மூதற்கணுள்ளதாகிய பிரணவத்தின் பொருளைக் கூறும்வண்ணம் பிரமதேவரை வினவி, அப்பிரமன் அதன் பொருள் விளங்காமையால் மயங்க, அவனுடைய நான்கு தலைகளிற் குட்டிக் கொடிய சிறையிலிட்டு, உலகில் நிலைபெற்ற உயிர்களையெல்லாம் பலகாலம் படைத்துக்கொண்டிருப்பான் என்பது கருத்து. மேலினி - ஒருபொருட் பன்மொழி - எதிர்காலத்தி லென்றபடி.

தாரகன் றன்னைச் சீயத் தடம் பறு முகத்தி ஞனைச்
சூரபன் மாவை யேனை யவுணரைத் தோலைவு சேய்தே
நாரணன் மகவா னேனை யமரர்க ளிடுக்க ணீக்கிப்
பேரருள் புரிவ னின்சேய் பின்னர்நீ காண்டி யேன்றான்.

உனது மகன் தாரகனையும் சிங்கமுகனையும் சூரபன்மனையும் ஏனைய அசுரர்களையும் அழித்து, பிரமன் இந்திரன் முதலிய தேவர்களின் துன்பத்தையொழித்து அவர்களுக்குச் சிறந்த அருள்புரிவான்; இவற்றை நீ பின்னர்க் காண்பாயென்று கூறியருளினுர் (சிவபிரான்) என்பது கருத்து.

தாரகன் சிங்கன் சூரனென்னு மூவரையும் முருகவேள் தாமே அழித்து ஏனைய அசுரரை வீரவாகு முதலிய இலக்கத்தொன்பது வீரர்கள் மூலம் வதைப்பித்தனரெனினும், அவர்கள் வதைக்கப்படுதற்கும் முருகவேளே காரணகருத்தாவாக வுள்ளாராதலின் "ஏனைய அவுணரைத் தொலைவுசெய்தே" என்றார். சூரபன்மன் முதலாயினேர்க்குச் செய்த மறக்கருணையையும் அரிபிரமேந்திராதி தேவர்கட்குச் செய்த அருட்கருணையையும் உட்படுத்திப் பேரருளென்றார். (21)

என்றலு மிளையோன் சேய்க யெம்பெரு மாட்டி கேளா
நன்றேன மகிழ்ச்சி சோண்டு நணுகலு முலக மேல்லாஞ்
சேன்றரு ளாடல் சேய்யுந் திருத்தகு குமரன் பின்னர்
ஒன்றோரு விளையாட் டுள்ளத் துன்னியே புரித லுற்றான்.

என்று இங்ஙனம் சிவபிரான் கூறியருளுதலும் எங்கள்தாயாகிய உமாதேவியார் தமது இளைய திருக்குமாரராகிய முருகக் கடவுளுடைய மகிமையான செயல்களைக் கேட்டு நல்லதென்று மகிழ்ச்சியடைந்திருத்தலும், உலகமெங்கணுஞ் சென்றுசென்று திருவிளையாடல்களைச் செய்தருளுகின்ற குமரேசமூர்த்தி பின்னரும் ஒரு திருவிளையாடலைத் திருவுளத்திற் கொண்டு செய்வாராயினர் என்பது கருத்து.

[ஒன்றொரு விளையாட்டு - தமது சத்தி வியாபித்த விளையாட்டு; ஒன்றொரு விளையாட்டென்பது ஒன்றிய ஒரு விளையாட்டென்றே பிரிக்கப்படும்] (22)

குலகிரி யனைத்து மோர்பாற் கூட்டிடு மவற்றைப் பின்னர்த்
தலைதடு மாற்ற மாகத் தரையிடை நிறுவும் எல்லா
அலைகட றனையு மோன்றா வாக்குறும் ஆழி வேற்பைப்
பிலனுற வழுத்துங் கங்கைப் பெருநதி யடைக்கு மன்னே

(திக்குகள்தோறும் பொருந்திய) சிறந்தமலைகளையெல்லாம் ஒரேயிடத்துச் சேரச்செய்வர்; அம்மலைகளை அதன்பின்னர் இடங்கள் மாறுமாறு நிலத்தில் நிறுவுவார்; திரைமறிகின்ற கடல்களெல்லாவற்றையும் ஒருங்கு வந்து கலக்கச்செய்வார், சக்கரவாளகிரியைப் பாதலம்புக அழுக்குவார், பெரியகங்கையாற்றை அப்பாற் செல்லவொட்டாது (தமது திருக்கரத்தால்) அடைத்துவிடுவார் என்பது கருத்து,

குலகிரி - அட்டதிக்கிலும் பொருந்தியுள்ள உந்நதமலைகளாகிய கயிலை இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, கந்தமாதனமென்பவை; கங்கை பூவுலகிலுள்ள சிறந்த சீவநதிகளுளொன்றாதலின் "பெருநதி" யென்றார். கடல்களை யொன்றாக்குதல் கடல்களுக் கிடையேயுள்ள தரையை மறையச் செய்தல், (23)

இருள்கேழு பிலத்துள் வைகு மேண்டோகைப் பணியும் பற்றிப்
போருள்கேழு மேருவாதி யடுக்கலிற் பூட்டி வீக்கி
அருள்கேழு குமர வள்ளல் ஆவிசட் கூறின் றாக
வுருள்கேழு சிறுதே ராக்கோண் டோல்லேன வுருட்டிச் சேல்லும்.

கருணை வள்ளலாராகிய குமாரக்கடவுள் இருள் பரவியுள்ள பாதலத்தில் வசிக்கும் அட்டமாநாகங்களையும் பிடித்துப் பொன்மயமான மேரு முதலிய மலைகளில் வடமாகத் தொடுத்து, சிற்களோடுகூடிய சிறு தோரகப் பாவித்து, அதனல் எவ்வுயிர்கட்கும் ஏதம் நேராமல், விரைவாக உருட்டித் திரிவாரென்பது கருத்து

மேரு முதலாம் மலைகளைத் தேராகவும் அட்டமா நாகங்களை அத்தேர்களிற் பூட்டிக் கயிறுகவுங் கொண்டு சிறுதேருருட்டி யாடல்செய்யும்போது அச்செயலால் உயிர்கட்கு எவ்வகையான இடையூறும்நேராவண்ணம் காத்தருளுங் காருண்ணியமுடைய தெய்வமென்பார் "அருள்கெழு குமரவள்ளல் ஆவிகட் கூறின்றாக......உருட்டிச் செல்லும்" என்றார்.

பணி - பணத்தையுடையது, பணம் - படம், எனவே படத்தையுடைய பாம்பென்றாயிற்று; எண்தொகைப் பணிகளாவன:- அநந்தன், வாசுகி, தக்கன், கார்க்கோடகன், பதுமன், மகாபதுமன், சங்கபாலன், குளிகன் என்பன.

[எண்தொகைப் பணியென்பதற்கு எண்ணப்படுந் தொகை கொண்ட பாம்புகளெனினுமாம்.] (24)

## தடை நீங்கியது

சோல்பெரித் திட்டத்தின்படி பாடசாலை மனேஜர்கள், சொந்தக்காரர் பாராளுமன்றத் தேர்தலில் அபேட்சகராக வரக்கூடாது என்ற தடையுத்தரவைக் குடியேற்றநாட்டு மந்திரி இப்போது தவிர்த்துவிட்டார். ஆனல் அரசியல் சம்பந்தமாகச் சிறைவிதிக்கப்பட்டவர்கள் மீது விதித்திருந்ததடை இன்னும் நீக்கப்படவில்லை.

## யாழ்ப்பாணத் தேர்தல்

யாழ்ப்பாணத் தொகுதிக்கான பாராளுமன்றத் தேர்தல் 5—9—47 செவ்வாய்க்கிழமை நிகழுமென்று எமது அரசியல் நிருபர் தெரிவிக்கிறார்.


## தேவை

சகல விதமான நகை வேலைகளிலுந் தேர்ச்சி பெற்ற பத்தர்மார்கள் மாதச் சம்பளமாகவோ கம்மிஷனகவோ வேலை செய்ய விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தங்கள் தங்கள் முக்கிய அனுபவமான வேலைகளைப்பற்றிய தகவல்களுடன்எழுதவும். 45 வயசுக்கு மேற்பட்டவர்கள் தேவையில்லை. தேவைப்பட்டவர்களுக்கு வருவதற்குரிய பேமிற் அனுப்பலாம்.

நேதாஜி டயமெண்ட் கம்பெனி
162 சுப்போ ரேட்
சேண்டுல்
கோலாலம்பூர்.
தந்தி: "நேதாஜி" கோலாலம்பூர்
Mis 77 7-7-47 to 5-8-47.


## விளம்பரம்

துளிகாம்பாள்துணை

ஆசார்யா அபிஷேகம்

யாழ்ப்பாணம், வில்லூன்றிப் பிள்ளையார் கோயில் பூசகர் பிரம்மஸ்ரீ. மு. பரமசாமி ஐயர் அவர்களுக்குத் திருப்புகலூர் பிரம்மஸ்ரீ. ஐ. பெரியசாமிக் குருக்கள். ஐ. கனகசபாபதிக் குருக்கள், சா. குப்புச்சாமி சிவாச்சாரியர் அவர்களால் இந்தமீ 11-ந் திகதி (30 6-47) திங்கட்கிழமை பகல் 11 30 மணிக்கு மேற்படி அபிஷேகம் நடைபெற்றது.

இங்ஙனம்,
ஐ. பெரியசாமிக் குருக்கள்.

திருப்புகலூர்,
சன்னிதானம்,
30—6—47
Mis 78, 8—7—47.

## அருணகிரிநாத சுவாமிகளின் ஜெனனதினம்

சென்ற 2-7 47 புதன்கிழமை இரவு 7 மணி தொடக்கம் 10 மணி வரை பிரம்மஸ்ரீ. R. மூர்த்திஐயர் வாசஸ்தலத்தில் திருப்புகழ் பஜனைகள் நடைபெற்றன. முருகன் அன்பர்கள் சமுகம் கொடுத்தனர். —கடிதம்.

## அபிஷேகமும் மணவாளக்கோல உற்சவமும்

வண்மேற்கு காட்டுத்துறை பகவதி மாரியம்மை கோவிலில் வருகிற வியாழக்கிழமை (10-7-47) மத்தியானம் சங்காபிஷேகமும் அன்றிரவு 7மணி தொடக்கம் மணவாளக்கோல உற்சவமும் நடைபெறுமென மேற்படி கோயில் அர்ச்சகர் பிரம்மஸ்ரீ. சி. இரத்தினசபாபதிக் குருக்கள் தெரிவிக்கின்றார்.


## ஆங்கிலம்

மூன்று மாசத்தில் ஆங்கிலம் எழுதப் பேசப் பயிற்றிவிடலாம்; ஓய்வுள்ள நேரத்தில் நீரே வீட்டில் படித்துக் கொள்ளலாம். தபால் மூலமாகவே நாங்கள் பயிற்றி வருகிறேம்; மாசவேதனம் ரூபா 2–50.

அற்லஸ் ஹால்
தபாற் பெட்டி இல. 649
கொழும்பு

Std 19 27-5 — 26-8-47


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகஊழல்

1-ம் பக்கத் தொடர்ச்சி

மல் வீட்டிலேயே இருந்துகொள்ளுதல்வேண்டும். குறித்த இரண்டு அபேட்சகரதும் கொள்கைகள் பிடிக்காதபடியால்தான் நாம் தேர்தல்தலத்துக்குப் போகவில்லை என்பதை அதிகார வர்க்கம் எப்படி அறியமுடியும்? போக்குவரத்து வசதியீனம் காரணமாகவோ, அல்லது அசிரத்தை காரணமாகவோ நாம் போகவில்லை என்று எங்கள் செயலுக்கு அதிகார வர்க்கம் தப்பர்த்தம் செய்துகொள்ளக்கூடும். தேர்தல்களைப் பகிஷ்காரம் செய்வதால், இப்போதுள்ள நிலையில் நாம் எர்விருப்பத்தை அதிகாரபீடத்துக்குத் தெரிவிக்க முடியாது.

எங்கள் உண்மையான அபிப்பிராயத்தை அறிவிக்க, தேர்தற் சட்டத்தில் எதிர்மறை வாக்குச்சீட்டு முறை அநுட்டிக்கப்படல் வேண்டும். அதாவது, இரண்டு பிரச்சினைகளைப்பற்றி வாக்குக் கேட்டால், இந்த இரண்டும் வேண்டாம் என்று நாம் எம் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்முறையே அது; இந்த முறை கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் அமுலில் இருக்கிறது. போலந்தில் எதிர்மறை வாக்குக் கொடுக்க வாக்காளர்க்கு உரிமையிருக்கிறது. இந்தமுறை மிகவும் சிறந்தது. ஜனங்களின் உண்மையான அபிப்பிராயத்தை அறிந்து ஜனநாயகக் கொள்கைகளை உண்மையில் நிலைநாட்ட இது ஓர் சிறந்த வழியாகும்;

இப்படியான எதிர்மறை வாக்குச் சம்மதமுறை இல்லாத வாக்கெடுப்பு பயனற்றதாகும். உதாரணமாக வடமேற்கெல்லைப்புற மாகாணத்தை எடுத்துக்கொள்ளுவோம். பாகிஸ்தான் வேண்டுமா, ஹிந்துஸ்தான் வேண்டுமா என்பதில் மாத்திரம் ஜனங்கள் சம்மதம் தெரிவிக்க வேண்டுமாம்! இந்த இரண்டுஸ்தானும் வேண்டாம் என்று கூற ஏன் எல்லைப்புற மக்களுக்கு உரிமையிருக்கக்கூடாது.

இந்திய அரசியல் நிர்மாணசபையில் இன்று சிறந்த அரசியல் நிபுணர்கள் இருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்திலும் சிறந்த இராஜதந்திரிகள் இருக்கிறார்கள். அவர்கள் இப்படியான எதிர்மறை வாக்குச் சம்மத முறை உலகின் சிலபாகங்களில் அமுலில் இருப்பதை அறியார்களா? எல்லைப்புற விஷயத்தில், பாகிஸ்தானும் வேண்டாம், ஹிந்துஸ்தானும் வேண்டாம் என்று மக்கள்கூற, எதிர்மறை வாக்குமுறையைக் கட்டாயம் அநுட்டிக்கவேண்டும் என்று இராஜப்பிரதிநிதிக்கு இவர்கள் ஏன் வற்புறுத்தவில்லை. காலம் போய்விட்டதா? நீதி நியாயம்வழங்குதற்கும் காலம்போவதைப் பார்க்கமுடியுமா?

# கருமமும் கடவுள் வழிபாடும்

1-ம் பக்கத் தொடர்ச்சி

உண்டாகிறது. உடர்பற்றும் உருவப்பற்றும் நமக்கு இருக்கும்வரை கடவுளை உருவமாகவே தியானித்தல் வேண்டும். இறைவன் உருவத்தை தியானிக்கும் சமயத்தில் சமாதி எண்ணமோ அல்லது அவ்வுருவம் நம் மனக்கண்ணை விட்டகல வேண்டுமென்ற எண்ணத்தையோ கொள்ளக் கூடாது. தியானம் எவ்வளவு நேரம் பழகவேண்டும் என்ற வினா கடைசியாக எழுகிறது. ஒருமைப்பட்ட தியானம் நீண்டநேரம் கைகூடுவதும் துர்லபம்: நீண்டநேரம் தியானத்தில் சிரமப்பட்டு ஈடுபடுவது தீங்கை விளைவிக்கவும் கூடும். ஆகவே அடுத்தடுத்து நித்திரைவிட்டெழுந்த உடன் 5 நிமிஷம் ஸ்நானம் செய்யுமுன் 5 நிமிஷம் உண்ணுமுன் 5 நிமிஷம் ஒரு காரியத்தைத் தொடங்குமுன் 5 நிமிஷம் இவ்வாறாக பலநிமிஷ தியானங்களை ஒரு தினத்தில் கையாளுவோமானால் அந்நாள் முழுதும் அது மன ஒருமைப்பாட்டை அளிப்பதோடு தியான நேரமும் எளிதாக அதிகப்படும். இவ்வாறு தியான மார்க்கத்தைக் கையாளுமுறையில் கடவுள் வழிபாட்டில் ஈடுபட்டு அவரவர்கள் கர்மத்தைத் தெய்வீக நோக்குடனும், அமைதியுடனும் செய்து எல்லாம் அவன் செயலெனை வாழ்க்கையை நடத்துவது எல்லோருக்கும் நன்மையைப் பயக்கும்.


# இப்பொழுது எங்கள் கைவசமுள்ளன!

| | |
|---|---|
| சுத்தமான "பிறேக்" எண்ணெய் | டுக்கோ பிறே வர்ணங்கள் |
| ஸிமொனிஸ் பொலிஷ் | "சைக்கிள்"கள் |
| ஹோர்-பல்ப்ஸ் | சைக்கிள்களுக்கு தேவையான தனிப்பொருள்கள் |
| குட்ஸ்யர் வான்-பெல்ற்ஸ (FanBelts) | றேடியோக்கள் |
| மின்சாரப் பொருள்கள் | ரயர் ரியூப்கள் |

**T. N. லிங்கம் & ஸன்,**

எவ்வகையான மோட்டார் வண்டிகளுக்கும் சைக்கிள்களுக்கும் தேவையான பொருள்களும் தனிப் பொருள்களும் கொடுப்பவர்கள்; மின்சாரப் பகுதிக் கன்றுச்ரர்கள்.

தெலிவோன் இல. 108.
248, K. K. S யாழ்ப்பாணம்.
19-6-47 Std 23 24-6-47—22-7-47.

# கந்தசாமி வைத்தியர்
## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

**கால் ரூத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பி யில் அனுப்புவோம்.

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை

Std 25 1-7-47—30-6-48 (செ)

# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்சேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

இ. 156, செக்கடித்தெரு கொழும்பு
Std. 1. 26—3—47 to , 1—4—48


# ஞாபக சின்னம் வேண்டாம்

## மிஸ்ரர் சேனநாயக்கர் வேண்டுகோள்

"சிங்கள மக்கள் விவசாயிகள்தான்: அவர்கள் காலில் சேறு உண்டு: ஆனால் அந்தச் சேற்றைக் கழுவிவிட்டு, அவன் அரசியலிற் பிரவேசிப்பானேயாகில், அவன் எந்தச் சிம்மாசனத்திலும் இருக்க யோக்கியமுடையவனாவான்" என்று பல காலத்துக்குமுன் ஓர் ஆங்கிலக் கனவான் கூறினார். அந்தக் கூற்று மிஸ்ரர் சேனநாயக்கா விஷயத்தில உண்மையாய்விட்டது என்று முதலியார் என். விக்கிரமரத்தின என்பவர் சென்ற திங்கட்கிழமை கண்டியில் நிகழ்ந்த கீழ்நாட்டு விளைபொருட்சங்கக் கூட்டத்திற் கூறினார். மிஸ்ரர் சேனநாயக்கா இந்த இலங்கைக்கு ஆற்றிய மகத்தான சேவைகளை இந்நாட்டு மக்களுக்கு என்றும் ஞாபகமூட்டுதற்கு ஓர் சிறந்த ஞாபகசின்னம் ஏற்படுத்தவேண்டுமென்று மிஸ்ரர் சார்ல்ஸ் ஏ. எம். டீ. சில்வா ஓர் பிரேரணையை எடுத்தாண்டார். அதனை ஸ்ரீ ஆர். ரீ. செல்லையா அநுவதித்தார்.

தனக்கு எந்தவிதமான ஞாபக சின்னமும் வேண்டியதில்லை என்றும், தாம் மனச்சாந்தியுடன் இந்த நாட்டின் சுபீட்சத்தைக் கண்டுவிட்டாலே போதும் என்றும் மிஸ்ரர் சேனநாயக்கா கூட்டத்திற் கூறி, இத்தீர்மானத்தைத் தவிர்க்கும்படி வேண்டிக்கொண்டார். அவர் வேண்டுகோளின்படி தீர்மானம் தவிர்க்கப்பட்டது.

# இலங்கைப் பொருளாதார நிலை

இலங்கையின் பொருளாதார நிலைமை இந்தியாவின் நிலைமையிலும் பார்க்க மிகவும் சிறந்ததாகவும், ஸ்திரமானதாகவும் இருக்கிறதென்று ஸ்ரீ ஜஃத். எம். எஸ். ஆனே சென்ற திங்கட்கிழமை நிகழ்ந்த ஓர் பிரியாவிடைக் கூட்டத்திற் கூறினார். இலங்கைக்குப் புதிய அரசியல் அந்தஸ்து வழங்கப்படவிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் இந்நாட்டின் தலைவர்கள் இலங்கைவாழ் இந்தியர் பிரச்சினையைச் சமரச மனப்பான்மையுடன் நோக்குவர் எனத் தாம் நம்புவதாகவும் ஸ்ரீஜஃத் ஆனே குறிப்பிட்டார்.


விளம்பரமின்றேற் பெரும்பணமில்லை

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai. Jaffna. on Tuesday. July. 8, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org